[2010 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

35—

தொழிற்பேட்டை

***63546—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்குப் பொதுவான சுமார் 1,500 ஏக்கர் நிலங்கள் அரசு ஆட்டுப் பண்ணையிடம் உள்ளன. இதைக் கருத்தில்கொண்டு, அங்கே தொழிற்பேட்டை அமைந்தால், தலைவாசல் மற்றும் சின்னசேலம் ஆகிய தொகுதி மக்களுக்கும், இரண்டு மாவட்ட மக்களுக்கும் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்பதை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே சேலம், மேட்டூர், வீரபாண்டி மற்றும் எடப்பாடி ஆகிய நான்கு இடங்களில் தொழிற்பேட்டைகள் உள்ளன. மொத்தம் 153 மனைகளும், 93 தொழிற்கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேட்டூர் தொழிற்பேட்டையில் இன்னும் மூன்று மனைகள் காலியாக உள்ளன. தலைவாசலைச் சுற்றி அமைந்துள்ள வடசென்னிமலை, தட்டுத்துறை, காட்டுக்கோட்டை மற்றும் வடகுமரி ஆகிய இடங்களில் குறுந் தொழிற்பேட்டைகள் ஒவ்வொன்றும் ஒரு ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் மொத்தம் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு தற்போது அங்கே தொழில் நடத்த சாத்தியக்கூறுகள் இல்லாததால், அவை நலிவடைந்து, பலர் தொழிற்கூடங்களை வீடுகளாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, இப்பகுதியில் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வராத காரணத்தாலும், மேலும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு தற்போது மக்களிடம் எதிர்ப்பு காணப்படுவதாலும், தொழிற்பேட்டை அமைக்க நிலங்கள் பெறுவது கடினமாக உள்ளது. இச்சூழ்நிலையில் தலைவாசல் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையிடமும் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. அதேபோல தலைவாசல் தொகுதியில் தேவனங்குறிச்சி, காமக்கார்பாளையம் மற்றும் மலைவிழுந்தான் போன்ற பகுதிகளில் அரசு நிலங்கள் உள்ளன. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையிலே இருக்கின்ற பண்ணையை எடுப்பதற்கு இப்பொழுது எந்தவிதமான சாத்தியக்கூறும் இல்லை. ஏனென்றால், கால்நடைத் துறை சம்பந்தமான நிலங்களை எடுக்கவேண்டுமென்று சொன்னால், அதற்குப் பதிலாக இரண்டு மடங்கு இடத்தை வேறு இடங்களில் கொடுக்கவேண்டும். ஆகவே அதில் நாம் கை வைக்க முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்பேட்டை அமைக்க நினைத்தால், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி, வேறு நிலங்களை ஏற்பாடு செய்தால், விரைவில் அரசு அவற்றை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி, எனது அச்சரப்பாக்கம் தொகுதியாகும். அங்கே ஏழை, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, தொழிற்சாலைகளோ இல்லாத நிலையில், அந்த மக்கள் குறிப்பாக, மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக்கு வெளியில் சென்று படிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் தொழில் செய்கின்ற வகையில், வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஏக்கர் நிலப்பரப்பிற்குமேல் தனியார் தொழிற்பேட்டை அமைக்கப் போதுமான நிதியாதாரங்களோடு தொழில் திட்டங்களுடன் தொழில் தொடங்க

2010 ஏப்ரல் 8]

ஆர்வம் உள்ள குறைந்தபட்சம் 20—க்கும் குறையாமல் தொழில் முனைவோர்கள் வந்தால், புதியதாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைக்கு ரூபாய் ஒரு கோடி வரை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக மானியம் வழங்குவதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும், தனியார் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணத்தில் 50 விழுக்காடு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. கூட்டுறவு முறையிலே தொழிற்பேட்டைகள் அமைக்க 25 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தற்போது இருக்கும் 12 தொழில் கூட்டுறவு தொழிற்பேட்டைகளையும் சேர்த்து, மேலும் ஒரு தொழிற்பேட்டையை காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியிலே அமைக்க அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

பத்திரப் பதிவு அலுவலகம்

***57607—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் விரிவுபடுத்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் பேரூராட்சியில், ஏற்கெனவே சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளதால், இவ்வலுவலக ஆட்சி எல்லைக்குள் மேலும் ஒரு விரிவுபடுத்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு எதுவுமில்லை.